# இரட்டைக் காப்பியங்களில் சோழ மன்னர்களின் ஆட்சியும் போர் முறையும்

**முனைவர் ப. மணிமேகலை**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி.**
**கோயம்புத்தூர் – 4. megaladeivanai@gmail.com**

4

**ஆய்வுச் சுருக்கம்**

கி.பி.இரண்டாம் நூற்றாண்டு மக்களின் வாழ்வியலை தெரிந்து கொள்ள சிலப்பதிகாரம், மணிமேகலை இவ்விரு காப்பியங்களும் பெட்டகமாகத் திகழ்கின்றது. தமிழில் காப்பியங்களை ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் என இருவகையாகும். அறம், பொருள், இன்பம், வீடுபேறு இந்நிலையைப் பெற்று வருவது ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையான காப்பியங்களாக சிலப்பதிகாரம் அமைகிறது. அதற்கு அடுத்து மணிமேகலை காப்பியம் விளங்குகிறது. சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் இயற்றியுள்ளார். சமண சமயக் காப்பியமாகும். மணிமேகலை காப்பியத்தை சீத்தலைச் சாத்தனார் இயற்றியுள்ளார். இக்காப்பியம் பௌத்த சமய காப்பியமாகும். இவ்விரு காப்பியங்கள் வெவ்வேறு சமயங்களை வலியுறுத்துகின்றவையாக இருந்தாலும் சிலப்பதிகாரத்தின் கதைத் தொடர்ச்சி மணிமேகலை பெற்று வருவதால் இரட்டைக் காப்பியங்களில் இடம்பெறும் சோழ மன்னர்களைப் பற்றியும் அவர்களின் ஆட்சி, போர் முறையைப் பற்றி ஆராயும் முகமாக இக்கட்டுடை விளங்குகிறது.

**முன்னுரை**

சிலப்பதிகாரம், மணிமேகலை இவ்விரு காப்பியங்கள் பண்டைய கால மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கிறது. நம்முடைய நாட்டில் ஆரம்பக் காலகட்டத்தில் மன்னராட்சி முறை நடைமுறையிலிருுநத தற்போது மக்களாட்சி முறை நடைமுறையில் உள்ளது. அவ்வகையில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சோழ மன்னர்கள் பற்றியும் அவர்கள் ஆட்சி முறை, வெற்றிச் சிறப்பு, போர்த்திறன் ஆகியவற்றைப் பற்றி இரட்டைக்காப்பியங்களில் இடம்பெறும் வரலாற்றுச் செய்திகளைக் கொண்டு விளக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

**சோழ மன்னர்கள்**

இரட்டைக் காப்பியங்களில் இடம்பெறும் சோழ மன்னர்கள் பின்வருமாறு,

1. முசுந்தன்
2. சிபி சக்கரவர்த்தி
3. தொடி தோட்செம்பியன்
4. ஆத்தி மாலையைச் சூடிய உதயக்குமரன்
5. கரிகால் பெருவளத்தான்
6. நெடுமுடி கிள்ளி

7. இளங்கிள்ளி
8. இளஞ்சேட்சோழன்

ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

**1.முசுந்தன்**

இரட்டைக் காப்பியங்களில் இடம்பெறும் முதல் சோழன் முசுந்தன் ஆவார். பூம்புகார் நகரத்தை முதலில் ஆட்சிச் செய்து வந்தவர் இந்திரன். அவர் தவம் செய்ய முற்பட்டார் அப்போது பூம்புகாரை யார் காப்பாற்றுவார்கள் என கேட்டார். அதற்கு புலி நான் காப்பாற்றுகிறேன் என்றது. புலி சின்னம் சோழர்களின் அடையாளமாகும். அதன் பின்னர் பூம்புகாரில் சோழர் ஆட்சி மலர்ந்தது. பூம்புகாரை ஆட்சி செய்த முதல் சோழ மன்னர் முசுந்தன் ஆவார். அவற்றைப் பற்றியச் செய்தி,

**“கொடுவரி ஊக்கத்துக் கோநகர் காத்த**
**தொடுகழல் மன்னற்குத் தொலைந்தன ராகி**
**நெஞ்சிருள் கூர நகர்த்துமேல் விட்ட**
**வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்” (சிலம்பு.6: 8-11)**

என்னும் பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

**2. சிபி சக்கரவர்த்தி**

புறாவின் துன்பமும் பருந்தின் துன்பமும் நீங்க தன் உடம்பை அறுத்து புறாவின் எடை அளவிற்கு தன் இதயத்தின் எடையினை பருந்திற்கு இரையாகத் தந்தார் என்னும் செய்தி,

**“குறுநடைப் புறவின் நெடுந்துயர் தீர**
**எறிதரு பருந்தின் இடும்பை நீங்க**
**அரிந்துடம் பிட்டோன் அறந்தரு கோளும்” (சிலம்பு.27 : 166-168)**

என்னும் வரிகளால் சிபி சக்கரவர்த்தி பற்றி அறிய முடிகிறது. சிலம்பில் இடம்பெறும் செய்திப் புறநானூற்றில்,

**“கூர் உசிர்ப் பருந்தின் ஏறுகுறித்து ஒரீஇத்,**
**தன் அகம் புக்க குறுநடைப் புறாவின்**
**தபுதி அஞ்சிச் சீரை புக்க**
**வரையா ஈகை உரவோன்” (புறம்.43: 5-8)**

புறாவின் எடைக்காக பருந்திற்கு தன்னுடைய தசையை தந்தார் என்ற செய்தி இடம்பெறுகிறது.

**3. தொடி தோட் செம்பியன்**

கிள்ளிவளவனின் முன்னோன் தொடிதோட் செம்பியன் ஆவான். தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் என்னும் சிறப்புப் பெயரினைக் கொண்டு விளங்கினான் என்பதையும் அப்பெயர் பெறக் காரணம் பற்றியும்,

**“தூங்கு எயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை**
**நாடா நல் இசை, நல் தேர்ச் செம்பியன்” (சிறு.பாணாற்: 81-82)**

தூங்கெயில் கோட்டையை வென்று வெற்றியின் அடையாளமாக தன் கையில் காப்புத் தொடி

அணிந்துக் கொண்டான். தேரில் செல்லும் வழக்கம் கொண்டவன் என சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

இந்திர விழாவின் போது புகார் நகரில் இந்திரனை தங்கும் படி தொடிதோட் செம்பியன் வேண்டினான். அதன்படி இந்திரனும் புகார் நகரில் இந்திரவிழாவின் போது தங்கியிருந்தார் என்பதை,

**"தூங்கெயி லெறிந்த தொடிதோட் செம்பியன்**
**விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று"** **(மணி. 1: 4-5)**

மேற்காணும் மணிமேகலை காப்பியத்தின் வரிகளின் மூலம் இச்செய்தியை அறியமுடிகின்றன.

**4. அத்தி மாலையை சூடிய உதயக்குமரன்**

சோழ மன்னர்கள் தங்கள் அடையாளப் பூவான ஆத்தி மாலையைச் சூடினார் என்பதை,

**"காரலர் கடம்பன் அல்ல னென்பது**
**ஆரங் கண்ணியிற் சாற்றினன் உருவோன்"** **(மணி.4: 49-50)**

மணிமேகலை காப்பியத்தில் உதயக்குமரன் காளவேகம் என்னும் யானையின் மதத்தை அடக்கியப் பின்னர் ஆத்தி மாலையான சோழர்களின் அடையாளப் பூவை அணிந்து வந்தான் என மணிமேகலை காப்பியம் குறிப்பிடுகிறது. மேலும் புறநானூறு,

**"அர்புனை தெரியல்நிலை முன்னோர் எல்லாம்**
**பார்பார் நோவன செய்யவர்"** **(புறம்.43: 13-14)**

ஆத்தி மாலையைச் சூடிய சோழர்கள் அந்தணர்கள் நோகும் படி எந்த ஒரு செயலைச் செய்ய மாட்டார்கள் என புறநானூறு குறிப்பிடுகிறது.

**5. கரிகால் பெருவளத்தான்**

கரிகால் பெருவளத்தான் பற்றி வரலாற்றுச் செய்தி இரட்டைக் காப்பியங்களில் இடம்பெறுகின்றது. கரிகாலனின் மற்றொருப் பெயர் திருமாவவளத்தான் என்பதை,

**"இருநிவல மருங்கிற் பெறுநலைரப் பெறாஅச்**
**செருவெங் காதலின் தீருமாவளவன்"** **(சிலம்பு.5: 89-90)**

என்னும் சிலப்பதிகாரப் பாடல் வரிகளின் மூலம் கரிகால் பெருவளத்தானின் வேறுபெயர் திருமாவளவன் என அறியமுடிகிறது.

சிறு வயதில் முதியவன் வேடம் அணிந்து கரிகால் சோழன் தீர்ப்பு வழங்கியச் செய்தி,

**"இளமை நாணி முதுமை யெய்தி**
**உரைமுடிவு காட்டிய வரவோன் மருகற்கு**
**அறிவுள் சாலபும் அரசியல் வழக்கும்"** **(மணி.4: 107-109)**

மணிமேகலை காப்பியத்தின் வழி வெளிப்படுகிறது. இவ்வரலாற்றுச் செய்தி பழமொழி நானூற்றில்,

**"உரை முடிவு காணான் இளமையோன் என்ற**
**நரை முது மக்கற் உவய - நரை முடித்து**
**சொல்லாலே முறை செய்தான் சோழன் குலவிச்சை**
**கலமாற் பாகம் படும்"** **(பழமொழி நானூறு.21: 1-4)**

இவ்வரிகளால் மணிமேகலையில் இடம்பெறும் கரிகால் சோழன் முதியவன் வேடம் அணிந்து தீர்ப்பு வழங்கிய வரலாற்றுச் செய்தி இடம்பெறுகின்றன.

இமயமலைக்கு படையெடுத்து செல்லும் போது வழியில் தடையாகயிருந்த மலைகளில் புலி முத்திரைப் பதித்துச் சென்றான் என்பதை,

**"பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென**

**இமையர் உறையுஞ் சிமையப் பிடர்தலைக்" (சிலம்பு.5: 96-97)**

இவ்வரிகளால் அறிய முடிகிறது. வடநாட்டு மன்னர்களை வென்று வெற்றி வாகையை சூடினான். சிறுவயதில் அரசாட்சிக்கு வந்தாலும் போர் திறன் கொண்டவனாக கரிகாலன் விளங்கினான்.

**6. நெடுமுடிகிள்ளி**

நெடுமுடிகிள்ளி அரசனுக்கு வென்வேற்கிள்ளி, மாவண் கிள்ளி, வடிவேற்கிள்ளி, கழற்கிள்ளி என பலப் பெயர்களில் அழைக்கப்பட்டார். உதயணன் அவர்களுடைய தந்தை நெடுமுடிகிள்ளி ஆவர். காரியாறு என்னிடத்தில் நடைபெற்ற போரில் சேர மன்னனையும், சோழ மன்னனையும் போரில் வெற்றிக் கொண்டவர் என்பதை,

**"காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை**

**வளகெழு தடக்கை மாவண் கிள்ளி" (மணி.19: 126-127)**

இவ்வரிகளின் மூலம் வெளிப்படுகிறது. நெடுமுடிகிள்ளி புகார் நகரை ஆட்சிச் செய்த போது அங்கு கடல்கோள் ஏற்பட்டது என்பதை,

**"விரிதிரை வந்து வயினர் விழுங்க**

**ஒருதனி போயின னுவக மன்னவன்" (மணி.25: 203-204)**

இப்பாடலின் வழி அறிய முடிகிறது. கடல்கோள் ஏற்பட்டப் பிறகு புகார் நகரை விட்டு நெடுமுடிகிள்ளி வெளியேறினான் என மணிமேகலை கூறுகிறது.

**7. இளங்கிள்ளி**

நெடுமுடிகிள்ளிக்கு அடுத்து புகார் நகரை ஆட்சி செய்த மன்னன் இளங்கிள்ளி என,

**"நடுநக ரெல்லை நண்ணின ளிழிந்து**

**தொடுகழற் கிள்ளி துணையிளங் கிள்ளி" (மணி.28: 171 -172)**

மணிமேகலை காப்பியம் சுட்டுகிறது. இளங்கிள்ளி பாண்டியர்களை தன்னுடைய படையைக் கொண்டு தாக்கி வெற்றியினை அடைந்தான் என்பதை,

**"சிலைக்கயல் நெடுங்கொடி செருவேற் றடக்கை**

**ஆர்புனை தெரியல் இளங்கோன் நன்னால்" (மணி.19: 124 - 125)**

மணிமேகலை காப்பியத்தின் வழி வெளிப்படுகிறது.

**8. இளஞ்சேட் சோழன்**

செங்கோல் ஆட்சி முறையினைக் கொண்டு விளங்கிய அரசன் இளஞ்சேட் சோழன் ஆவார். இமயமலை வரை போர் எடுத்துச் சென்றது இமயமலையில் வில் கொடியினை பொறித்த சோழன் என்பதை,

**"திங்கள் மாலை வெண்குடையாள்**

**சென்னி செங்கோ லருவோச்சிக்**

**கங்கை தன்னைப் புணர்ந்தாலும்" (சிலம்பு.7 : 2: 1-3)**

இவ்வரிகளின் மூலம் அறியமுடிகிறது. இமயத்தை வெற்றிக் கொண்டு திரும்பும் வழியில் கங்கையில் நீராடினான் என்னும் செய்தி இடம்பெறுகிறது.

**முடிவுரை**

பண்டைய தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர் மன்னர்களில் ஒருவர் சோழர்கள் இவர்களுடைய ஆட்சி காலத்தில் புகார் நகரில் இந்திர விழா நடைபெற்றது என்பதையும், கடல்கோளால் புகார் அமுக்கப்பட்ட வரலாற்றுச் செய்தியும், சோழர்கள் செங்கோலான ஆட்சி முறையினை கடைப்பிடித்தார்கள். அவர்களின் அடையாளமான ஆத்தி மாலையைச் சூடினார். அவர்களிடம் போர்ப்படை திறமையாக இருந்தால் சேர, பாண்டிய மன்னர்களை போர் செய்து வெற்றி பெற்றனர். இமயமலை வரை போர் செய்து புலி சின்னத்தையும், வில் கொடியும் பொறித்தார்கள் சோழர்கள் ஆட்சித் திறனும் போர்ச் சிறப்புக் கொண்டவர்களாக விளங்கினார்கள் என்பதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

**முனைவர் ரகுநாதன் வ** - **புறநானூறு மூலமும் உரையும்**
வடிவேல் பதிப்பகம்
தஞ்சாவூர் - 613 004
முதற்பதிப்பு - திசம்பர் 2003

**வேங்கடசாமி நாட்டார் ந.மு** - **சிலப்பதிகாரம் மூலமும் உரையும்**
ராமையா பதிப்பகம்
சென்னை - 600 014
பத்தாம் பதிப்பு - 2019

**வேங்கடசாமி நாட்டார் ந.மு** - **ஐம்பெருங்காப்பியங்கள் 2 மணிமேகலை**
**துரைசாமிப் பிள்ளை ச** அமிழ்தம் பதிப்பகம்
சென்னை - 600 017
முதற்பதிப்பு - 2014

**அறவாணன் க.ப** - **பழமொழி நானூறு**
சபாநாயகம் பிரிண்டர்ஸ்
சென்னை - 10
முதற்பதிப்பு 2010

**ஔவை துரைசாமி சு** - **பதிற்றுப்பத்து (சிறுபாணாற்றுப்படை) மூலமும் உரையும்**
தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்பு கழகம் லிட்
சென்னை - 600 018